**<u>சுருக்கம்</u>**

பள்ளிக் கல்வி – நிதி நிலை அறிக்கை 2011–12 – மாணவ / மாணவியர்கள் இடைநிற்றலை (School Dropouts) முற்றிலும் நீக்குவதற்கு அரசின் சிறப்பு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் – அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் அனைத்துத்துறை நிருவாக கட்டுப்பாட்டிலுள்ள உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 10ம் வகுப்பு, 11ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியர்கள் படிப்பை இடையில் நிறுத்தாமல் தொடர்ந்து படித்திட கல்வி ஊக்கத் தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**<u>பள்ளிக் கல்வி (இ1) துறை</u>.**

**அரசாணை (நிலை) எண். 141**

**நாள்: 13.09.2011**
**திருவள்ளுவராண்டு 2042**
**ஆவணி 27**

**படிக்கப்பட்டவை:–**

பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.67688/கே/இ2/2011, நாள் 09.08.2011 மற்றும் 07.09.2011.

–––––

**<u>ஆணை:</u>**

இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவ/மாணவியர் தங்கள் படிப்பை தொடராது இடை நிற்றல் செய்வதை தடுத்திடுவதற்கு 2011–12–ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் அரசால் கீழ்க்கண்ட சிறப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டது :–

*“மேனிலைப் பள்ளிகளிலிருந்து இடை நிற்றலை இன்னும் குறைப்பதற்கு பத்தாம் வகுப்பிலிருந்து பன்னிரெண்டாம் வகுப்புவரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் ஒரு சிறப்பு ஊக்கத் தொகை வழங்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் ஆகியவற்றில் பத்தாம் வகுப்பு, மேனிலை முதலாம் ஆண்டு பயிலும் மாணவ மாணவியர்களுக்கு தலா 1,500 ரூபாயும், மேனிலை இரண்டாம் ஆண்டு படிக்கும் மாணவ மாணவியர்களுக்கு தலா 2,000 ரூபாயும் ஊக்கத் தொகையாக மாநில அரசால் வழங்கப்படும். இத்தொகை மாணவ மாணவியர்களின் பெயரில் மின்விசை நிதி நிறுவனம் போன்ற பொதுத் துறை நிதி நிறுவனங்களில் வைப்புத் தொகையாக வைப்பீடு செய்யப்பட்டு, அவர்கள் பள்ளிப் படிப்பை முடிக்கும் பொழுது அத்தொகை அவர்களுக்கு வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் 394.04 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் 24,94,649 மாணவ /*

*மாணவியர் பயன்பெறுவார்கள். இத்திட்டத்தின் மூலம் மேனிலைப் பள்ளிகளில் இடைநிற்றல் விகிதம் மேலும் குறையும்.''*

2. இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்திட மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் பள்ளிக் கல்வி இயக்குநர் பின்வரும் கருத்துருவினை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

1) துவக்கப் பள்ளிகளில் மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் 1.79% ஆக உள்ள இடைநிறுத்த விகிதம் (dropout rates) உயர்நிலைப்பள்ளிகளில் 8.4% ஆகவும், மேல்நிலைப் பள்ளிகளில் 21.6% ஆகவும் உள்ளது. எனவே நடுநிலைப்பள்ளி படிப்பை முடித்த மாணவ / மாணவியர்களின் குடும்ப சூழ்நிலை, வறுமை போன்ற பல்வேறு காரணங்களால் தங்கள் உயர்நிலை / மேல்நிலைப் படிப்பைத் தொடர இயலாத நிலை உள்ளது. இதனை முற்றிலும் களையும் விதமாக உயர்நிலையில் 10–ம் வகுப்பு படிக்கும் மற்றும் மேல்நிலையில் 11, 12–ஆம் வகுப்பு படிக்கும் மாணவ / மாணவியர் எக்காரணம் கொண்டும் தங்கள் படிப்பை இடையில் நிறுத்தாமல் தொடர்ந்து படித்திட ஊக்கமளிக்கும் வகையில் கல்வி ஊக்கத் தொகையாக 10 மற்றும் 11–ம் வகுப்பு மாணவ/மாணவிகளுக்கு ரூ.1500/– மற்றும் 12–ம் வகுப்பு மாணவ /மாணவிகளுக்கு ரூ.2000/– வழங்கலாம்.

2) மேலும் இவ்வூக்கத் தொகையினை சாதி, மத, இன வேறுபாடின்றியும் மற்றும் ஏற்கனவே கல்வி உதவித் தொகை பெறும் ஆதிதிராவிட பழங்குடியின மாணவர்கள் மற்றும் கற்பிப்புக் கட்டணத்தை மீளப் பெறும் ஆங்கில வழியில் பயிலும் மாணவர்கள் ஆகிய அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து வகை மாணவ / மாணவியருக்கும் வழங்கலாம்.

3) மேலும், இத்திட்டத்தினை நடைமுறைப் படுத்துவதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்த பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரையில் இவ்வூக்கத் தொகையினை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் (Tamil Nadu Power Finance and Infrastructure Development Corporation Limited-(POWERFIN))ல் முதலீடு செய்யலாமெனவும் அம்முதலீட்டுத் தொகையினை பரிந்துரைக்கப்பட்ட வழிமுறைகளின்படி அம்மாணவர்கள் பள்ளிப் படிப்பை முடித்து செல்லும் போது அவர்களிடம் ஒப்படைக்கலாமெனவும் தெரிவித்துள்ளார்.

3. மேலே பத்தி 2ல் கண்ட பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துரு நன்கு பரிசீலிக்கப்பட்டு அரசு பின்வரும் ஆணையினை வெளியிடுகிறது.

1) அனைத்துத்துறை நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் அனைத்து வகை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ / மாணவிகள் எக்காரணம் கொண்டும் தங்கள் படிப்பை இடையில் நிறுத்தாமல் தொடர்ந்து படித்திட ஊக்கம் அளிக்கும் வகையில் சாதி, மத, இன வேறுபாடின்றி உயர்நிலை பள்ளியில் 10ம் வகுப்பு மற்றும் மேல்நிலைப் பள்ளியில் 11ம் வகுப்பில் பயிலும் அனைத்து வகை மாணவ / மாணவிகளுக்கும் தலா ரூ.1500/– (ரூபாய் ஆயிரத்து ஐநூறு

மட்டும்) மற்றும் மேல்நிலைப் பள்ளியில் 12ம் வகுப்பு படிக்கும் அனைத்து வகை மாணவ / மாணவியர்களுக்கு தலா ரூ.2000/– (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) கல்வி ஊக்கத் தொகையாக மாநில அரசால் வழங்கப்படும்.

2) இத்தொகை மாணவ / மாணவியர்களின் பெயரில் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் (Tamil Nadu Power Finance and Infrastructure Development Corporation Limited-(POWERFIN))ல் வைப்புத் தொகையாக வைப்பீடு செய்யப்பட்டு அவர்கள் பள்ளிப் படிப்பை முடிக்கும்பொழுது அத்தொகை அவர்களுக்கு வழங்கப்படும்.

3) இத்திட்டத்தினை செயல்படுத்த கீழ்க்கண்ட நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

(i) 10ம் வகுப்பு முடித்து 11ம் வகுப்பு சேரும்போது, 11ம் வகுப்பு சேருகின்ற பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களிடம், 10ம் வகுப்பு படித்த பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் அம்மாணவ / மாணவியர்கள் 10ம் வகுப்பில் படித்தபொழுது தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் (Tamil Nadu Power Finance and Infrastructure Development Corporation Limited-(POWERFIN))ல் வைப்பீடு செய்யப்பட்ட ரூ.1500/–க்கான பத்திரங்களை ஒப்படைக்க வேண்டும். அத்தலைமையாசிரியர் 11ம் வகுப்புக்கான தொகை மற்றும் 12ம் வகுப்புக்கான தொகையினை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்து, மாணவ/மாணவியர் 12ம் வகுப்பு முடித்து செல்லும்போது, அப்பத்திரத்தினை அம்மாணவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

(ii) 10ம் வகுப்பு முடித்து, 11ம் வகுப்பில் சேராமல் தொழிற்பாடப்பிரிவு (Vocational Courses) மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் (Industrial Training Institute) மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேரும்பட்சத்தில் தாங்கள் அப்படிப்பில் சேர்ந்ததற்கான சான்று ஆவணங்களையும் மற்றும் சம்பந்தப்பட்ட அப்பயிற்சி நிறுவனங்களின் முதல்வரிடமிருந்து அம்மாணவ / மாணவியர்கள் அப்பயிற்சி நிலையங்கள் / கல்லூரியில் படித்துக் கொண்டிருப்பதற்கான அத்தாட்சி சான்றுகளை (Bonafied Certificate)யும் பெற்றுவந்து தாங்கள் 10ம் வகுப்பு படித்த பள்ளியின் தலைமையாசிரியரிடம் கொடுத்து தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் பத்திரத்தினை பெற்றுக் கொள்ளலாம்.

(iii) 10ம் வகுப்பு தேர்ச்சி பெறாத மாணவ/மாணவியர்கள் அடுத்த இரண்டு பருவ காலங்களுக்குள் 10ம் வகுப்பு தேர்ச்சிப்பெற வேண்டும். அதே போன்று 11ம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்கள் அடுத்த இரண்டு பருவ காலங்களுக்குள் தேர்ச்சி பெற வேண்டும். அவ்வாறு 10ம் வகுப்பு / 11ம்

வகுப்பு தேர்ச்சி பெற்ற பிறகு 11ம் வகுப்பு / 12ம் வகுப்பு சேருகின்ற பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களிடம், 10ம் வகுப்பு / 11ம் வகுப்பு படித்த பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் அம்மாணவ / மாணவியருக்கான தமிழ்நாடு மின்விசை மற்றும் அடிப்படை வசதிகள் நிதி நிறுவனத்தின் பத்திரத்தினை ஒப்படைக்க வேண்டும். அத்தலைமையாசிரியர் 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு 11ம் வகுப்பு / 12ம் வகுப்புக்கான தொகை மற்றும் 11ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ / மாணவியர்களுக்கு 12ம் வகுப்புக்கான தொகையினை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்து, மாணவ/மாணவியர் 12ம் வகுப்பு முடித்து பள்ளியை விட்டு செல்லும்போது, அப்பத்திரத்தினை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

(iv) அவ்வாறு இரண்டு பருவ காலங்களுக்குள் 10ம் வகுப்பு / 11ம் வகுப்பில் தேர்ச்சி பெறாத மாணவ / மாணவியர்கள் மற்றும் 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்று 11ம் வகுப்பில் சேராமல் இடைநிறுத்தம் செய்யும் மாணவ / மாணவியர்களின் முதலீட்டுத் தொகை, அம் மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்படாமல் மீளவும் அரசுக் கணக்கில் செலுத்தப்படும்.

4. இத்திட்டத்தின்கீழ் 2011–2012ம் ஆண்டில் மாணவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கும் செலவிற்காக ரூ.321.17 கோடி (ரூபாய் முந்நூற்று இருபத்தோரு கோடியே பதினேழு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. பொது பிரிவு மாணவ மாணவியருக்கான செலவினம் (ரூ.25693.60 இலட்சம்) கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202–பொதுக் கல்வி – 02 – இடைநிலைக் கல்வி – 109 – அரசு இடைநிலைப் பள்ளிகள் – பதினோராம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II – மாநிலத் திட்டம் – KJ – மாணவ மாணவியரின் இடைநிலைக் கல்வியில் இடைநிற்றலைக் குறைப்பதற்காக வழங்கப்படும் ஊக்கத் தொகை – 09 – உதவித் தொகை – 09 – ஏனையவை (து.தொ.கு. எண். 2202 02 109 KJ 0995)

6. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ / மாணவியருக்கான செலவினம் கீழ்க்கண்ட புதிய தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

<u>ஆதி திராவிட மாணவ மாணவியர்</u> – (ரூ.61,02.23 இலட்சம்)

"2202 – பொதுக்கல்வி – 02 – இடைநிலைக் கல்வி – 789 – ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் – பதினோராம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II – மாநிலத் திட்டம் – JH மாணவ மாணவியர்களின் இடைநிலைக் கல்வியில் இடைநிற்றலைக் குறைப்பதற்காக வழங்கப்படும் ஊக்கத் தொகை – 09 – உதவித் தொகை – 09 ஏனையவை (து.தொ.கு எண் 2202 02 789 JH 0990)

பழங்குடியின மாணவ மாணவியர் – (ரூ.321.17 இலட்சம்)

“2202 – பொதுக்கல்வி – 02 – இடைநிலைக் கல்வி – 796 – பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – பதினோராம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II – மாநிலத் திட்டம் – JA மாணவ மாணவியர்களின் இடைநிலைக் கல்வியில் இடைநிற்றலைக் குறைப்பதற்காக வழங்கப்படும் ஊக்கத் தொகை – 09 – உதவித் தொகை – 09 ஏனையவை (த.தொ.கு எண் 2202 02 796 JA 0999)

7. மேலே பத்தி 4ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத்திற்கான கூடுதல் நிதி 2011–2012ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதித்திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அவ்வாறு நிதியொதுக்கம் செய்யப்படும் வரை மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையினை பெற்று வழங்கிட பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது என்றும் இச்செலவினத்தை சட்டப் பேரவையின் சிறப்பு கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு, இவ்வாண்டின் துணை மானியக் கோரிக்கையில் சேர்ப்பதற்குரிய கருத்துருவை நிதி (வ.செ.பொது.I)த் துறைக்கு அனுப்பமாறும், மேலும் 2011–2012ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துரு நிதித்துறைக்கு அனுப்பும் பொழுது இச்செலவினத்தையும் சேர்த்து அனுப்புமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. பிற அரசுத் துறைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு உதவித் தொகை வழங்குவதற்கான செலவின ஒப்பளிப்பு ஆணை சம்பந்தப்பட்ட தலைமை செயலக துறைகளால் தனியாக வெளியிடப்படும். செலவின ஒப்பளிப்புக்கான கருத்துருவினை காலதாமதமின்றி சம்பந்தப்பட்ட தலைமை செயலக நிர்வாகத் துறைக்கு சமர்ப்பிக்குமாறு துறைத் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

9. மேலே பத்தி 6ல் குறிப்பிட்டுள்ள புதிய கணக்குத் தலைப்புகளுக்கு பள்ளிக் கல்வி இயக்குநர் மதிப்பீட்டு, கட்டுப்பாட்டு மற்றும் சரிபார்த்தல் அலுவலராவர்.

10. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.எண். 204/DS(KM)/2011–1 நாள் 13.09.2011–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண் 553 (ஐநூற்று ஐம்பத்து மூன்று).

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா
அரசு செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6
மாநில கூடுதல் திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் இடைநிலை கல்வித் திட்டம், சென்னை–6.

மாநிலக் கணக்காயர், சென்னை–18.
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்கு துறை,  சென்னை–15.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்.
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்,
490/3–4 அண்ணாசாலை, நந்தனம், சென்னை–35.
செயலாளர். சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டம் துறை, சென்னை–9.
செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி நலத்துறை, சென்னை–9.
செயலாளர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–9.
செயலாளர், சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை, சென்னை–9.
செயலாளர், உயர்கல்வித் துறை, சென்னை–9.
செயலாளர், தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறை, சென்னை–9.
செயலாளர், சிறப்புத் திட்டம் (ம) செயலாக்கத் துறை, சென்னை–9.

நகல்
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
இயக்குநர் சமூக நலத்துறை, சென்னை–5.
இயக்குநர் ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை, சென்னை–5.
ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சென்னை–5,
இயக்குநர்,  மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை, சென்னை–5.
ஆணையர், சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–2.
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், பனகல் மாளிகை, சென்னை–15.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6
மாநில திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் கல்வித் திட்டம், சென்னை–6
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர்  அலுவலகம், சென்னை–9.
நிதி (கல்வி –II / வரவு செலவு பொது I / II)த்துறை, சென்னை–9.
செயலாளரின் தனிச் செயலர்,
பள்ளிக் கல்வித்துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வி (வரவு செலவு) த்துறை, சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

13/9/2011
பிரிவு அலுவலர்.